பக்கங்கள் 17

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 18 வியாழக்கிழமை 05.10.2023 அதிர்வு 66



## பயணிகள் கப்பல் நாளை போக்குவரத்து சோதனை

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத் துக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்து சோதனை முறையில் நாளை தொடங் கப்படுகின்றது. 04

# முல்லைத்தீவு நீதிபதி விடயம்

# ஐ.நா. அமர்வில் எதிரொலிப்பு

## போர்க்குற்றவாளியான வீரசேகர எம்.பி. வெளிப்படையாக மிரட்டினார் என்று கஜேந்திரகுமார் பகிரங்கக் குற்றச்சாட்டு



- எஸ்.நிதர்ஷன் -

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் விவகாரம் ஜெனிவாவில் இன்று எதிரொலித்தது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது அமர்வின் பொது விவாதத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றும்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தார். 04



### ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில்

## கைதாகி விடுதலையான 'கஜன் மாமா' திடீர் சாவு!



(கனகராசா சரவணன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பிள்ளையான் கட்சியைச் சேர்ந்த "கஜன் மாமா" என்றழைக் கப்படும் ரங்கசாமி கனகநாயகம் (வயது 56) இன்று அதிகாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு 04

## பரிந்துரைப்பு மனு நேற்று கையளிப்பு

- எஸ்.நிதர்ஷன் -

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெஸ்ஸுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கை மனு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ஸிடம் 04



## நீதிபதி ஏன் வெளியேறினார் என்பதை உணர்ந்து பேசுங்கள்

### விஜயதாஸவுக்கு சுரேஷ் பதிலடி

- எஸ்.நிதர்ஷன் -

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறிய சூழலை உணர்ந்து, அவரது நிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்த்துக் கருத்திடுவது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு நல்லது."

– இவ்வாறு ஜனநாயகத் 05



AARI WORK, SAREE BLOUSE AND SHALWAR வகுப்புகளுக்கு

புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்




Whatsapp
+1 (647) 856-6080

இலங்கையில் பிரசித்திபெற்ற தையல் கலைஞர் Shamala Jayaratnam அவர்களால் October மற்றும் November மாதங்களில்

Aari work | Saree Blouse | Shalwar

வகுப்புகள் கனடாவில் நடாத்தப்படவுள்ளன.

Chinese Cultural Centre Of Greater Toronto, (Parking Lot Entrance via Progress Ave), 5183 Sheppard Ave E, Scarborough, Ontario - M1B 5Z5



# முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி வழங்கக் கோரி கொழும்பு சட்டத்தரணிகள் 9 இல் போராட்டம்!

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களை கண்டித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன் கொழும்பு சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி கொழும்பு அளுத்கடை நீதிமன்றத்துக்கு முன்பாகச் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து பாரிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளோம்.

நீதிபதிக்காக நீதி கேட்டு இடம்பெறும் போராட்டங்களில் சட்டத்தரணிகள் என்ற வகையில் எமது வேலைகளைப் புறக்கணித்து ஆதரவை வழங்குவோம்.

இவ்வாறு வன்னி வலயச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும், இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான பத்திநாதர் அன்ரன் புனிதநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (04) நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கேட்டு மனித சங்கிலி போராட்டம் இடம்பெற்றிருந்தது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அச்சுறுத்தல் காரணமாக முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியமை இலங்கை நீதித்துறைக்கு மட்டுமல்ல சிறுபான்மை மக்களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை.

முல்லைத்தீவு நீதிபதி தனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகியுள்ளார். தனக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகவே பதவி விலகினார் என்று தனது பதவி விலகல் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களை கண்டித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன் கொழும்பு சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முல்லைத்தீவு நீதிபதிக்காக நீதி கேட்டு இடம்பெறும் போராட்டங்களில் பொது அமைப்புகளும், மக்களும் கலந்து கொண்டு ஆதரவை வழங்க வேண்டும்.– என்றார்.

# இரண்டு நாள்களில் 11 பேரைக் காணோம்!

## இவர்களில் 5 பேர் சிறுவர்கள்

கடந்த 2 நாள்களில் 5 சிறுவர்கள் உட்பட 11 பேர் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பிலான முறைப்பாடுகள் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துரிகிரிய பிரதேசத்தில் உள்ள மெஹேனி பௌத்த மடத்தில் கல்விகற்ற பதினான்கு மற்றும் பதினைந்து வயதுடைய பிக்குகள் இருவர், பிபில பிரதேசத்தில் உள்ள பெண்கள் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த பதினாறு வயது சிறுமிகள் இருவர், கடந்த 3ஆம் திகதி முதல் காணவில்லை என்று பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த இரண்டு சிறுமிகளும் பிபில பிரதேசிக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் பதினொன்றாம் வகுப்பில் கல்வி கற்பவர்கள் என தெரியவந்துள்ளது.

மாணவிகள் இருவரும் பாடசாலையில் இருந்து புத்தகப் பைகளுடன் வெளியேறியுள்ளனர் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் அவர்கள் பெண்கள் இல்லத்தக்கு மீண்டும் வராமையால் பாதுகாவலர் பிபில பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதேவேளை வெலிமடை, அம்பேகமுவ பிரதேசத்தில் 14 வயதுடைய பாடசாலை மாணவியொருவர் காணாமல் போயுள்ளார் என்று மாணவியின் பெற்றோர் ஊவா பரணகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன், பியகம, பேராதனை வீதியைச் சேர்ந்த 23 வயதான ஹோட்டல் தொழிலாளி, கிருலப்பனை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சாரதி, கந்தளாயையை சேர்ந்த 63 வயதுடைய நபர் மற்றும் எரகம பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவர், யாழ்ப்பாணம் செல்வநகர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர், கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதியும் ஆகியோரல் காணாமல் போயுள்ளமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

# பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கிய ஓட்டோ உரிமையாளர் கைதானார்!

பாணந்துறை – அலோபோமுல்ல பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் மதுபோதையில் ஓட்டோ செலுத்திய சாரதி ஒருவரை கைது செய்ய சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோ சாரதி மதுபோதையில் அதிவேகமாக வாகனத்தை செலுத்திச் சென்றுள்ளார். இதன்போது அலோபோமுல்ல பொலிஸ் போக்குவரத்து பிரிவின் கான்ஸ்டபிள் ஒருவர் வாகனத்தை நிறுத்திச் சாரதியிடம் விசாரணை நடத்தியுள்ளார்.

அப்போது சம்பவ இடத்துக்கு வருகைதந்த ஓட்டோ உரிமையாளர் கபொலிஸ் உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு ஆயுதத்தால் தாக்கியுள்ளார். பொலிஸாரைத் தாக்கிவிட்டு அந்த நபர் தப்பி ஓடியுள்ளார்.

தாக்கிவிட்டு தப்பியோடிய சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் அவரை நேற்று (04) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இதேவேளை, காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# 2 கிலோ கேரள கஞ்சாவுடன் பேசாலையில் பெண் கைது!

(மன்னார் நிருபர்)

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள காட்டாஸ்பத்திரி கிராம பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை (4) மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் அவரது வீட்டுக்குச் சென்று சோதனையை முன்னெடுத்தனர்.

இதன் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதி ஒன்றை மீட்டனர்.

அந்தப் பொதியில் சுமார் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது அந்த வீட்டில் இருந்த 44 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதியுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண் பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பேசாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# சிறுவருக்குக் குடும்ப மட்டத்தில் பாதுகாப்பு வழங்குதல் அவசியம்

## சிறுவர் தொடர்பான அய்வறிக்கையில் சுட்டிக்காட்டு

சிறுவர்களுக்காக மேற்கொள்ளப்படும் நிறுவனம் சார்ந்த பாதுகாப்புக்களை மட்டுப்படுத்தி குடும்ப மட்டத்திலான பாதுகாப்பை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்டு சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்கில் ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் (03) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல்வேறு பிரச்சினைகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் முழுமையான நலன்புரிகள் தொடர்பில் பரந்த ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளை முன்மொழிவதற்காக 2023 ஏப்ரல் 19 ஆம் திகதியன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய மேற்படி குழு நியமிக்கப்பட்டிருந்தது.

விடயத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆழமான அறிவு மற்றும் நடைமுறைப் பரிந்துரைகளை தயாரிப்பதற்காக சுமார் ஐந்து மாத காலப் பகுதியில் 21 சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

நிறுவனச் சூழல், பெற்றோரின் அரவணைப்பு இன்மை, குடும்பப் பிரச்சினைகள், சமூக ஊடக பாவனை, சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பரந்த அளவிலான விடயப்பரப்பு தொடர்பில் இதன் போது ஆராயப்பட்டது.

அதேபோல் நவீன சமூகத்தின் தேவைகளை நிவர்த்திப்பதை இலக்காக கொண்டு சிறுவர் பாதுகாப்புக்காக இயங்கும் நிறுவனங்கள், நிர்வாகங்கள் மற்றும் சட்ட பாதுகாப்பின் போதுமான தன்மை தொடர்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு விதமான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அனாதரவாக விடப்பட்ட சிறுவர்களின் உடல், உளச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதனூடாக சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி சிறுவர் பாதுகாப்புக்கு அவசியமான சமூக பங்களிப்பு தொடர்பிலான புதிய பிரவேசங்கள் பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.

குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கான சிறுவர் சீர்த்திருத்த இல்லங்கள் மற்றும் மத்திய நிலையங்கள், அரசின் அனுமதி பெற்ற விசேட பாடசாலைகளில் இருக்கும் மாணவர்களை சாதகமான முறையில் சமூகமயப்படுத்தும் நோக்கில் 'நலனுக்க புனர்வாழ்வு செயன்முறை' தொடர்பிலும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்க்கை திறனுக்காக வலுவூட்டல் மற்றும் மக்கள் பாதுகாப்பு திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையங்களில் இருக்கும் சிறுவர்களை சாதகமான முறையில் சமூகமயப்படுத்துவதற்கான பரிந்துரைகளும் அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

சிறுவர்கள் பல்வேறுபட்ட வன்முறைகளுக்கு இலக்காகுவதற்கான வாய்ப்புகளை குறைத்தல் மற்றும் மட்டுப்படுத்தல், அவ்வாறான சிறுவர்கள் எதிர்கொள்ளும் வன்முறை வடிவங்களை அறிதல் மற்றும் அறிக்கையிடல், முகாமைத்துவ, பிரதிச் செயற்பாடுகளுக்கான பொறிமுறையை வலுவூட்டலுக்கான குறுகிய மற்றும் இடைக்கால, நீண்டகால கொள்கை மற்றும் பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

## கொழும்பில் குண்டுத் தாக்குதல்:

# வெளியான தகவல் தொடர்பில் அறிக்கை கோரும் நீதிமன்றம்!

கொழும்பின் பல பகுதிகளை இலக்கு வைத்து எதிர்வரும் நாள்களில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன நேற்று பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறிக்கையை பரிசீலித்த மேலதிக நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

நீதிமன்றில் இருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவரால் பேருந்தின் ஜன்னலுக்கு வெளியே வீசப்பட்ட சீட்டு துண்டு ஒன்றின் மூலம் இந்தத் தாக்குதல் தொடர்பிலான அடிப்படைத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பித்த முதற்கட்டத் தகவல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## முல்லைத்தீவு நீதிபதி விடயம்...

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

“வியன்னா பிரகடனமும் அதன் செயல் முறைகம் தொடர்பாக 27ஆவது பத்தி கூறுகின்றது, ”நீதி நிர்வாகத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு முறையாக நிதியளிக்கப்பட வேண்டும், மேலும் சர்வதேச சமூகத்தால் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளின் அதிகரித்த அளவு வழங்கப்பட வேண்டும்.”

எவ்வாறாயினும், கடந்த வாரம் இலங்கையில் தமிழ் நீதிபதி ரி. சரவணராஜா, “எனது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் காரணமாக எனது அனைத்து உத்தியோகபூர்வ பதவிகளையும் பணிகளையும் இராஜிநாமா செய்கின்றேன்” என்று கூறிவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

சிங்களப் பெரும்பான்மையினருக்குள் உள்ள பௌத்த தீவிர போக்குக் கொண்ட மதவாத, இனவாத சக்திகளை எரிச்சலூட்டுவதாகக் கூறி அவர் பிறப்பித்த உத்தரவை மாற்றுமாறு நாட்டின் சட்டமா அதிபரால் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அழுத்தமும் இதில் அடங்கும்.

போர்க்குற்றவாளி எனச் சந்தேகிக்கப்படும் இலங்கை அரச எம்.பி. (சரத் வீரசேகர) ஒருவர், உயரிய சபையில் அடிக்கடி

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றும், தமிழ் நீதிபதி தனது இடத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்றும் எச்சரித்து, நாடாளுமன்றத்தில் மேற்படி நீதிபதியை வெளிப்படையாகவே மிரட்டினார்.

அதே நாடாளுமன்ற உறுப்பினர் தேசிய பாதுகாப்புத் துறை தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தற்போதைய தலைவராகவும் உள்ளார்.

நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட எனது சக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அரச ஆதரவு குண்டர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டார்.

இது நடைபெற்றபோது பொலிஸார் அங்கு பார்த்துக் கொண்டிருந்தனர். பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் இருந்த நிலையில், பின்னர் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக, இறுதியில் 6 பேரைக் கைது செய்து, அடுத்தடுத்த நாட்களில் நீதிமன்றத்துக்குச் சென்று ”இனக் கலவரங்களை”த் தடுப்பதற்கு சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று காரணம் காட்டி விடுவித்திருந்தனர்.

சரியான சீர்திருத்தங்களை வலியுறுத்தாமல், உடைந்த நீதி நிர்வாக முறைமை கொண்ட இலங்கையைப் போன்று ஒரு நாட்டுக்கு நிதியளிப்பது நிறுவன மயமப்பட்ட அநீதியை நிலைநாட்டுவதாகவே அமையும்.” – என்றார்.

## பயணிகள் கப்பல் நாளை...

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்குச் செல்வதற்கான பயணிகள் கப்பல் இன்று நாகை துறைமுகத்துக்கு வந்தடைந்தது. நாளை வெள்ளிக்கிழமை நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்து சோதனை முறையில் தொடங்கப்படுகின்றது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கவுள்ளது. இதற்காக கடந்த மாதம் அமைச்சர் எ.வ.வேலு, நாகை துறைமுகத்தை ஆழப்படுத்தி தூர்வாரும் பணியைத் தொடங்கி வைத்தார். நாகப்பட்டினம் துறைமுகத்தை நவீனப்படுத்த இந்திய மத்திய அரசு வழங்கிய ரூ.3 கோடி (இந்திய ரூபா) நிதி கொண்டு நாகப்பட்டினம் துறைமுகத்தை ஆழப்படுத்தி, நவீனப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு அரசு இறங்கியது. இதைத் தொடர்ந்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் குடியுரிமை பெறுவது, மருத்துவ பரிசோதனை செய்வது, பயணிகள் கொண்டு வரும் உடமைகளை பாதுகாப்பாக வைப்பது மற்றும் ஆய்வு செய்வது என அனைத்துக்கும் தனித்தனியாக அறைகள் கட்டப்பட்டன.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் பணியாற்றுவதற்காக பாஸ்போர்ட் சோதனை செய்வது, பயணிகளின் உடமைகளை ஆய்வு செய்வது என பல்வேறு பணிகளில் பணியாற்றும் அதிகாரிகள் டில்லி சென்று பயிற்சி பெற்றனர். பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கியதும் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து 2 கப்பல்கள் இலங்கைக்கு வந்து செல்லும். இதில் ஒரு கப்பல், நாகப்பட்டினத்தில் இருந்து காலை 10 மணிக்கு இலங்கை காங்கேசன் துறைமுகம் நோக்கி செல்லும். எதிர்த் திசையில் இலங்கையில் இருந்து மாலை 5 மணிக்கு நாகப்பட்டினம் துறைமுகம் நோக்கி கப்பல் புறப்படும்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், “கேரளா மாநிலம் கொச்சி துறைமுகத்தில் இருந்து நாகப்பட்டினம் துறைமுகத்துக்கு ஒரு கப்பல் நேற்று இரவு புறப்பட்டுள்ளது. 400 நாட்டிக்கல் மைல் தூரத்தில் உள்ள நாகப்பட்டினம் துறைமுகத்துக்கு இந்தக் கப்பல் இன்று வந்தடைந்தது. சோதனை அடிப்படையில் நாளை நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து சோதனை முறையில் தொடங்கப்படும். அனைத்து கட்டுமான பணிகளும் நிறைவு பெற்று, ஜனவரி மாதம் முதல் முழுமையாக பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும்.” – என்றனர்.

## கைதாகி விடுதலையான...

டிசம்பர் மாதம் 25ஆம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுவந்த உயிரிழந்த கஜன் மாமா மற்றும் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தன், இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் உட்பட 5 பேர் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், 2019ஆம் ஆண்டு குறித்த வழக்கில் இருந்து அனைவரையும் நீதிமன்றம் விடுவித்தது.

இந்தநிலையில் உயிரிழந்த கஜன் மாமா மட்டக்களப்பு, 5ஆம் ஒழுங்கை, நாவற்குடாவில் வசித்து வந்த நிலையில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் வீட்டில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பரிந்துரைப்பு மனு...

கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து, நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கையளிக்கப்பட்டது.

இலங்கைத் தீவில் நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் , கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளின் பங்கேற்போடு கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்ரெஸுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கோரிக்கை மனு கையளிக்கப்பட்டிருந்தது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## நீதிபதி ஏன் வெளியேறினார்...

தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நீதிபதி ரி. சரவணராஜா தனது பதவிகளைத் துறந்து வெளியேறியது தொடர்பில் நீதி அமைச்சர் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே சுரேஷ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு தனது நீதிபதி பதவியை இராஜினாமா செய்து நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றார். இலங்கையில் நீதிபதி ஒருவர் உயிர் அச்சுறுத்தலின் காரணமாக தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அடிப்படையில் நாட்டைவிட்டு வெளியேறியது இதுவே முதல் முறையாகும்.

நீதிபதி ரி. சரவணராஜா குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாக இலங்கையின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தீர்ப்புக்களை வழங்கியதை ஏற்றுக்கொள்ள முடியாத சிங்கள பௌத்த இனவாத சக்திகள் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் அவரை அச்சுறுத்தும் தொனியில் பேசியதுடன், பௌத்த நிறுவனங்கள் அவருக்கு எதிராக சில வழக்குகளையும் தாக்கல் செய்திருந்தன. இது மாத்திரமல்லாமல், புலனாய்வுப் பிரிவினிருடைய தொடர்ச்சியான கண்காணிப்பு வலயத்துக்குள்ளும் அவர் உட்பட்டிருந்ததாகவும் அவரே தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு தனது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதை உணர்ந்தே அவர் வெளிநாடு சென்றிருப்பதாகத் தோன்றுகின்றது.

இலங்கையின் நீதித்துறையில் ஒரு தமிழ் நீதிபதி ஏற்படுத்தக்கூடிய தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ள பௌத்த பிக்குகளோ, சிங்கள பௌத்த இனவாதிகளோ தயாராக இல்லை என்பதை குருந்தூர்மலை போன்ற அண்மைய சம்பவங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. மொத்தத்தில் தமிழ் மக்களுக்கு குறைந்த பட்சம் இலங்கையின் நீதித்துறையினூடாக எத்தகைய நீதி நியாயங்களையும் எதிர்பார்க்க முடியாது என்பது திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அவரது நாடாளுமன்ற உரையின்போது நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தால் அல்லது அவர் மீது கண்காணிப்புகள் ஏதாவது ஏற்பட்டிருந்தால் அவர் உடனடியாகவே சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்யும்படி ஆணையிட்டிருக்க முடியும் என்பதுடன் நீதித்துறை என்பது சுதந்திரமானது என்பதுடன் அது நீதிச் சேவை ஆணைக்குழுவுக்குக் கட்டுப்பட்டது என்றும் இதில் அரசின் மேல் குற்றஞ்சாட்டுவதில் எந்தவித அர்த்தமுமில்லை என்றும் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

ஒரு விடயத்தை நீதி அமைச்சருக்கு முன்வைக்க விரும்புகின்றோம். இலங்கையின் நீதித்துறை என்பதும் பொலிஸ் என்பதும், இராணுவம் என்பதும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கின்றது.

குருந்தூர்மலையில் எந்தவித கட்டுமானங்களையும் மேற்கொள்ளக்கூடாது என இவருக்கு முன்னர் பதவியிலிருந்த நீதிபதி லெனின்குமார் ஒரு கட்டளையைப் பிறப்பித்திருந்தார். ஆனால், அந்தக் கட்டளை மீறப்பட்டு பௌத்த பிக்குகள் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் ஆதரவுடன் அங்கு ஒரு புதிய பௌத்த கோயிலைக் கட்டி முடித்திருக்கின்றனர். இது நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் ஒரு செயற்பாடு. இதற்கு எதிராக நீதி அமைச்சோ அல்லது நீதிச் சேவை ஆணைக்குழுவோ மேற்படி சட்டத்தை மீறியவர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கையையும் எடுப்பதற்குத் தயாராக இல்லை. பொலிஸாரோ இராணுவத்தினரோ தமிழ் நீதிபதிகளின் ஆணைகளை கட்டளைகளை மதித்து நடப்பதாகவும் தெரியவில்லை. இவ்வறான சூழ்நிலையில், நீதிபதி சரவணராஜாவுக்கு எதிரான அச்சுறுத்தல்களை மேற்கொண்டவர்களுக்கு எதிராக நீதிபதி ஆணையைப் பிறப்பித்திருக்கலாம், கைது செய்திருக்கலாம் என்பதெல்லாம் போலியானதும் அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கருத்தாகவே இருக்கின்றது.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், உயிருக்கு உத்தரவாதம் இருக்கின்றது என்று நம்பினால் மட்டுமே அவர் கட்டளைகளையோ ஆணைகளையோ பிறப்பிக்க முடியும். அவரது உயிருக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளபோது அவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்காது. அதைத்தான் சரவணராஜாவும் செய்திருக்கிறார் என்பதை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச புரிந்துகொண்டால் நல்லது.

இதுவெறும் சரணவராஜா என்ற நீதிபதி தொடர்பான விடயம் மாத்திரம் அல்ல. இலங்கையின் தமிழ் நீதிபதிகளின் தீர்ப்பை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை அவர்களது நடவடிக்கைகள் வெளிக்காட்டி நிற்பதுடன், இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்புகள் தமிழர்களுக்கு சார்பாக அமைந்துவிட்டால் அதனை ஏற்றுக்கொள்ளும் மனோநிலைகூட அவர்களுக்கு இல்லை என்பதையும் வெளிக்காட்டி நிற்கிறது. இவ்வாறான நிலையில், இலங்கையின் நீதித்துறையிடமிருந்து தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை சிதறடிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் நீதித்துறைமீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழப்பதற்கான காரணிகளுக்கு இது மேலும் வலுவூட்டியுள்ளது.

அதுமாத்திரமல்லாமல், மூதூர் குமாரபுரம் கிராமத்தில் 25க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டது தொடர்பாக திருகோணமலையில் நடைபெற்ற வழக்கை அனுராதபுரத்துக்கு மாற்றி, சிங்கள ஜூரிகளைக் கொண்டு அவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டனர்.

மீசாலையில் தமது சொந்தக் காணிகளைப் பார்வையிடச் சென்ற 8 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டு மலசலக்கூடக் குழிக்குள் புதைக்கப்பட்டனர். இந்தக் கொலையுடன் தொடர்புடைய ஒரு இராணுவ சிப்பாய்க்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் மரணதண்டனை வழங்கியது. இந்தத் தீர்ப்பை கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றமும் உறுதி செய்திருந்தது. ஆனால், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியானதும் அவர் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்.

சிங்கள இராணுவத்தினரோ அல்லது உயர் பதவிகளில் உள்ளவர்களோ வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் அவர்களது வழக்குகள் விசாரிக்கப்படும்போது தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று காரணம் கூறி அவற்றை சிங்களப் பிரதேசங்களுக்கு மாற்றிக்கொள்கின்றனர். ஆனால், தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்குகளை வடக்கு-கிழக்கு மேல்நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு கோரியபோது அவை தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டே வந்திருக்கின்றது.

இலங்கையில் நடந்து முடிந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் ஒரு சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தார்கள். அது அரசால் நிராகரிக்கப்பட்டது. தங்களது இராணுவம் புனிதமானது, அவர்கள் எந்தக் குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை என்று அரசு கடப நாடகம் ஆடியது. பின்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் சர்வதேச சுற்றுலா பயணிகள் உட்ப 269 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதன் சூத்திரதாரிகள் யாரென பிரித்தானியாவின் சானல் 4 தொலைக்காட்சி ஒரு ஆவணப்படத்தை வெளியிட்டிருந்தது. இதற்கு ஒரு சர்வதேச விசாரணை தேவையென கர்தினால் மல்கம் ரஞ்சித், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்ற அரசியல் மற்றும் சமய முக்கியஸ்தர்கள் குரல் கொடுத்தார்கள். அவ்வாறு சர்வதேச விசாரணை ஒன்று ஏற்படுத்தப்பட்டால் தமிழ் மக்களின் கோரிக்கையான யுத்தக் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, அதனைக் கைவிடும்படி பிரதி வெளிவிவகார அமைச்சர் கோரியிருந்தார். இதற்கமைய மேற்படி சர்வதேச விசாரணையைக் கோரியோர் தங்களது கோரிக்கையிலிருந்து பின்வாங்கியிருக்கின்றனர்.

அதாவது தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கக்கூடாது என்பதில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி எல்லோரும் மிகத்தெளிவாக இருப்பதையே இது காட்டுகின்றது. இவற்றையெல்லாம் புரிந்துகொண்டு நீதி அமைச்சர் பேசுவது நல்லது என்று கருதுகின்றோம்." - என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதிர்ப் பக்கத்தில் ரணில்!

தேர்தல்களைக் கண்டால் எப்போதுமே அஞ்சும் ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆப்படித்து விட்டார். தமது நல்லாட்சி அரசின் காலத்திலேயே மாகாண சபைத் தேர்தலுக்கு நிரந்தரமாக பூட்டுப் போட்டு விட்டார். அதற்கான வாசலை இப்போதைக்கு அவர் திறந்து விடப் போவதில்லை என்பது உறுதி. தற்போதைய நாடாளுமன்றுக்கு இன்னும் சுமார் இரண்டு ஆண்டுகள் பதவிக்காலம் உள்ளது. அதை முன்கூட்டியே கலைத்துப் பொதுத் தேர்களை நடத்தும் அதிகாரம் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வசம் இருந்தாலும், தேர்தல்களைக் கண்டு அஞ்சித் தொடை நடுங்கும் அவர் முர்கூட்டி ஒரு பொதுத் தேர்தலுக்கும் போக இணங்க மாட்டார் என்பது திண்ணம்.

இந்த நிலையில் அவர் தற்போது வகிக்கும் ஜனாதிபதிப் பதவிக்குரிய பதவிக்காலம் இன்னும் 11 மாதங்கள்தான். அது முடிவுறும் தறுவாயில் வரும் ஜனாதிபதித் தேர்தலை அவர் தவிர்க்க முடியாமல் எதிர்கொள்வது சட்டத்தின் கட்டாயம்.

நாட்டை மேலும் நிதி நெருக்கடிக்குள் மூழ்கடிக்கச் செய்து, நிதி இல்லாதமையால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப் போடுவதை தவிர வேறு வழியில்லை என்பது போன்ற முடிவுக்கு வரும் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி, அதிகார பீடத்தில் தான் தொடர்வதை உறுதிப்படுத்த அவர் முயலலாம். அல்லது அந்தத் தேர்தலையும் தந்திரோபாயத்தைப் நடத்தாமல் தள்ளி வைக்கும் வேறு தந்திரோபாய நகர்வுகளை அவர் எடுக்கலாம்.

அப்படித் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதில் அவர் பெரும் சூரர். சூழ்ச்சிக்காரர். பழமும் தின்று கொட்டையும் போட்டவர்.

ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலைத் தள்ளிப் போடும் முயற்சியில் அவர் இறங்கினால் அதனை நாடு சகித்துக் கொண்டிராது, பெரும் பிரளயமே வெடிக்கும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

அதனால் தவிர்க்க முடியாத இக்கட்டில், அடுத்த ஜனாதிபதி தேர்தலை ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட காலத்தில் எதிர்கொண்டேயாக வேண்டும் எனவும் அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அடுத்த தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளும், தரப்புக்களும் அணிவகுக்கும் வியூகம் ஓரளவு தெளிவாகி வருகின்றது. அணிகளைப் பிரிக்கும் கோடுகள் தெளிவாக வரையறுக்கப்படத் தொடங்கிவிட்டன.

ஜேர்மனின் டொச்சவெலா செய்தி நிறுவனத்துக்கு ஆக்ரோஷத்துடன் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பேட்டி, அவரது முகத்திரையைக் கிழித்து, அவரது உண்மை முகத்தை அம்பலப்படுத்தி விட்டது.

பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்குக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜேர்மன் ஆக்ரோஷப் பேட்டியை வரவேற்பதில் இருந்து இரண்டு விடயங்கள் தெளிவாகி விட்டன.

ஒன்று - எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுத் தரப்பு போன்ற பௌத்த - சிங்ளப் பேரினவாத இனவெறிப்அமைப்புகளுடன்தான் ரணில் விக்கிரமசிங்க இனி அணி சேர வேண்டும்.

அடுத்தது - பாரம்பரியமாக ரணிலுக்குக் கிடைத்து வந்த சிறுபான்மையினத்தவரின் ஆதரவு இனி அவருக்கு இல்லை.

ஆக, அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான கூட்டுக்களின் நிலைப்பாடுகளை வகுக்கும் கோடுகள் தெளிவாக வரையப்பட்டு விட்டன என்பதுதான் இதன் பொருள்.

## உணவுப் பற்றாக்குறை நாட்டில் ஏற்படும் நிலை!

### எச்சரித்துள்ளார் விவசாய அமைச்சர்

இலங்கையில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர எச்சரித்துள்ளார்.

உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாள்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக 70,000 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பல மாகாணங்களில் பெய்த கனமழை காரணமாக அறுவடைக்கு ஏற்ற நிலையில் இருந்த சுமார் நூறு ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. தாழ்நிலங்களில் பெய்து வரும் மழையால் மரக்கறிச் செய்கைகளும் அழிந்துள்ளன என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தொடர்ந்து அதிகரித்து வருகிறது நில்வள கங்கையின் நீர்மட்டம்!

நில்வள கங்கையின் நீர் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்று நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

பானதுகம பிரதேசத்தின் நீர் மட்டம் 6.87 மீற்றராக உயர்ந்துள்ளது என்று அந்தத் திணைக்களம் தற்போது விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 8 மணியளவில் அதன் அளவு 6.85 மீற்றராக பதிவாகியுள்ளது. இது 7.50 மீற்றராக உயர்ந்தால் பெரும் வெள்ள அபாய நிலைமை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில்வள ஆற்றின் பானதுகம மற்றும் தல்கஹகொட பிரதேசங்களில் தற்போது சிறு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## பாடசாலை செல்வதை நிறுத்தியுள்ள நாவலப்பிட்டி தோட்ட மாணவர்கள்

### மஹிந்தானந்த அழுத்கமகே எம்.பி. தகவல்

(மஸ்கெலியா நிருபர்)

நாவலப்பிட்டி தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் பிள்ளைகளில் முற்பது வீதமானவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

கண்டி மாவட்ட முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அழுத்கமகே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி பிரபல மங்கையர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்-

நாவலப்பிட்டி நகரை அண்டிய தமிழ் பாடசாலையைத் தரம் உயர்த்தி அந்தப் பாடசாலைக்கு சகல வளங்களையும் வழங்கிய போதும் கடந்த சில மாதங்களாக மாணவர்கள் வருகை குறைந்துள்ளது.

இந்தப் பாடசாலையில் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் தரம் குறைந்த நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் ஆசிரியர் பற்றாக்குறையே.

அரசு அனுமதி வழங்கினால் இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை எடுப்பேன்.- என்றார்.

நிகழ்வில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# கிண்ணியாவில் இராணுவம் கைவிட்ட முகாமுக்குள் சென்றுவருகிறார் பிக்கு!

## அச்சத்தில் தவிக்கின்றனர் பிரதேச மக்கள்

திருகோணமலை – கிண்ணியா குரங்குபாஞ்சான் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ முகாம் காணிக்குள் சென்று வரும் பௌத்த மதகுரு தலைமையிலான குழுவினரால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

பௌத்த பிக்கு உட்பட ஐவர் கார் ஒன்றில் நேற்று முன்தினமும் (03), நேற்றும் இந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் எம். எம். மஹ்தி வான் எல் பொலிஸ் நிலையத்துக்கும் கிண்ணியா பிரதேச செயலாளருக்கும் அறிவித்துள்ளார்.

கிண்ணியா பிரதேசத்தில் முஸ்லிம்கள் மாத்திரம் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இராணுவத்தினரால் கைவிடப்பட்ட குறிப்பிட்ட பகுதிக்கு பௌத்த மதகுரு உட்பட குழுவினர் சென்று வருவது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கைவிடப்பட்ட இராணுவம் முகாமுக்குள் பௌத்த சிலைகளை வைப்பதற்கு முயற்சிக்கின்றார்களா அல்லது புதையல் தோண்டுவதற்கு முற்படுகிறார்களா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்

கிண்ணியா பிரதேச மக்கள் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் காலகட்டத்தில் இவர்களின் வருகை சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அப்பகுதியில் உள்ள மக்களும், நகர சபை உறுப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரான்ஸில் அரசியல் படுகொலை:

# கொல்லப்பட்ட தமிழர் தொடர்பில் பிரான்ஸ் அரசிடம் நீதி கோரல்!

பிரான்ஸில் அரசியல் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் தமிழர்களின் பிரிதிநிதி நடராஜா மதீந்திரனின் படுகொலைக்கு நீதி வேண்டும்.

இவ்வாறு பிரான்ஸ் உள்துறை அமைச்சுக்கும், நீதி அமைச்சுக்கும் பிரான்ஸ் தமிழ் பண்பாட்டு வலயம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் சார்பாக தமிழ் பாரம்பரிய வலையமைப்பு, பிரான்ஸ் சங்கம் உங்களிடம் இந்தக் கோரிக் கையை முன்வைக்கிறது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

நவம்பர் 9, 2012 அன்று, பிரான்சில் தமிழ் மக்களின் தலைவரான நடராஜா மதீந்திரன், பரிஸ் 20 ஆம் வட்டாரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரான்சில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்த நடராஜா மதீந்திரன் இலங்கை அரசின் வேலைத் திட்டத்தின் கீழே பிரான்ஸில் அரசியல் படுகொலை செய்யப்பட்டார்.





நடராஜா மதீந்திரனின் கொலைக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவரது கொலையில் சந்தேக நபர்களை பிரெஞ்சு பொலிஸார் கைது செய்தனர், ஆனால் அவர்கள் சில காலங்களிலேயே விடுதலை செய்யப்பட்டனர்.

நடராஜா மதிந்திரன் படுகொலை வழக்கை பிரான்ஸ் அரசு எடுத்து புதிய விசாரணையை மீண்டும் தொடங்க வேண்டும்.

நடராஜா மதிந்திரன் பிரான்ஸில் வாழும் 450,000 ஈழத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். பிரான்ஸில் இதுவரை மூன்று தமிழர்கள் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இந்த மூன்று பேரின் கொலைகளுக்கும் நீதி கிடைக்காதது கவலை அளிக்கிறது.

தமிழ் மக்களின் இந்தக் கோரிக் கையை பிரான்ஸ் அரசும், பிரான்ஸ் அரசின் நீதித்துறையும் ஏற்று நடராஜா மதீந்திரன் படுகொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரான்ஸில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய அரசியல் படுகொலைகளுக்கு நீதி பெற்றுத் தருவது பிரான்ஸ் அரசின் கடமை. பிரான்சில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழர்களின் பாதுகாப்பையும் பிரான்ஸ் அரசு உறுதி செய்ய வேண்டும்.–என்றுள்ளது.

# தையல் பயிற்சி நெறியும் கண்காட்சியும்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அரநாயக்க வில்பொல 'பிரகதி' மகளிர் சங்கம் ஏற்பாடு செய்த 6 மாத கால தையல் பயிற்சி பாசறையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

மனித உரிமைக்கான ஆசாத் மற்றும் கிறோபா அமைப்பின் தலைவர் எம். எஸ். எம். ஸாதிக், குணநன நலன்புரி சங்கத்தின் தலைவர் மர்சூக் ஹாஜியார் , ஜும்ஆ பள்ளி வாசல் தலைவர் தேசமானிய பர்ஹான் உமர், அஹதிய்யா பாடசாலை அதிபர் நிஸாம் மௌலவி, ஓய்வுபெற்ற அதிபர் மிர்ஸியா, மகளிர் அமைப்பின் அங்கத்தவர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





புதிய மாணவர் அனுமதி - 2023 செப்டம்பர் நுழைவு

**UNDERGRADUATE DEGREE PROGRAMMES**

**COMPUTING | BUSINESS**

**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

25% இற்கும் மேலான புலமை பரிசில்கள்

நினைவில் கொள்ள வேண்டிய திகதி

விண்ணப்ப முடிவுத்திகதி
**5 OCT 2023**

தகுதிகாண் பரீட்சை
**7 OCT 2023**
( 10:30(மு.ப to 11:30(மு.ப)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

SLIIT | NORTHERN UNI

Call us now:
077 147 1471

northernuni.lk
apply@northernuni.com



# சாய்ந்தமருதில் சிறுவர் தினம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை கல்வி வலயத்தின் சாய்ந்தமருது கோட்டத்துக்கு உட்பட்ட அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில சர்வதேச சிறுவர் தினம் மற்றும் மீலாதுன் நபி விழா ஆகியன அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்றன.

மாணவர்கள் அனைவரும் பாடசாலைக் குழாமால் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து " எல்லாவற்றையும் விட சிறுவர்கள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது இஸ்லாமிய கலாபீடத்தின் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீதின் சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து மீலாத் தின சிறப்பு சொற்பொழிவை மாளிகைக்



காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் பேஸ் இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து தரம் 5 மாணவர்களால் போதை ஒழிப்பு தொடர்பான பதாதைகளை ஏந்திய வண்ணம் வீதி ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இறுதியாக மாணவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும், சிறுவர் தின நினைவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.



# சிறுவர் தினத்தில் மாணவருக்கு உணவளித்த ஆசிரியர்கள்!

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலையில் பயிலும் சகல மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மதிய போசனத்தை மனமுவந்து வழங்கினார்கள்.

இந்நிகழ்வு சம்மாந்துறை வலயத்தில் உள்ள நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது .

சர்வதேச சிறுவர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகப் பாடசாலை இணைபாளரும் உதவி கல்வி பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்துகொண்டார்.

மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள் இதன்போது இடம் பெற்றன. கயிறு இழுத்தல் போட்டி, சங்கீதக் கதிரை, சங்கீத தொப்பி மற்றும் பாடல் பேச்சு என்பன இடம்பெற்றன .

வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதியில் 500 மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.



# சிறுவர் தினத்தில் சேமிப்பு

(சப்னா றிபாஸ்)

உலக சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் வகையிலும், சிறுவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டும் கோமாரி மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன.

மக்கள் வங்கியின் பொத்துவில் கிளை அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பாடசாலையின் அதிபர் ரி. உதயகுமார் தலைமை தாங்கினார்.

மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்திய முகாமையாளர் திருமதி எம். எம்.ஏ. அமரசிறி இந்த நிகழ்வில் பிரதம அதியாகக் கலந்து கொண்டார்.

மக்கள் வங்கியின் பொத்துவில் கிளை வியாபார அபிவிருத்தி உத்தி யோகத்தர் எம்.ஐ.எம். நபீல் ஒருங் கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கோமாரி மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் சென்ற வருடம் க.பொ.த. உயர் தரப் பரீட்சை கலைப் பிரிவில் அனைத்துப் பாடங்களி லும் 'ஏ' தர சித்தி பெற்ற மாணவியும், கடந்த வருடம் 05ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாண வர்களும் மக்கள் வங்கியின் அம்பாறை மாவட்ட பிராந்திய முகாமையாளரால் பதங்கம், சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

'உலக சிறுவர் தினத்தில் சேமிப்பால் கற்றிடலாம்' எனும் தொனிப்பொருளில், உலக சிறுவர் தினத்தின் நிமித்தம் மக்கள் வங்கியின் இசுரு உதான அல்லது சிசு உதான சேமிப்புக் கணக் கில் இவ்வருடம் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் – டிசம்பர் 31 ஆம் திகதி வரை, பணத்தை வைப்புச் செய்யும் சிறுவர்கள் அனைவருக்கும் மக்கள் வங்கி பரிசுகளை வழங்கி வழங்கு கிறது.

அந்த அடிப்படையில் கோமாரி மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியால யத்தில் புதிய வங்கிக் கணக்குகளைத் திறந்த மற்றும் ஏலவே உள்ள கணக் குகளில் பண வைப்புச் செய்த சிறுவர்கள் அனைவருக்கும் மக்கள் வங்கியின் பொத்துவில் கிளை பரிசுகளை வழங் கியது.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்திய உதவி முகாமை யாளர் எஸ்.எம். மோகனதாஸ், மக்கள் வங்கியின் பொத்துவில் கிளை முகாமை யாளர் திருமதி எச்.பி.சி.சி. ராஜஹெவ, பிராந்திய வியாபார அபிவிருத்தி உத்தி யோகத்தர் ஜே.கே.டி. டிலினி தனுக்ஷா ரணுதுங்க ஆகியோர் கலந்து கொண் டனர்.

# பற்றிமாவில் மாணவர் தலைவர் தினம்






(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூ ரியின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வும், மாணவர் தலைவர்களுக்கான தினமும் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற் றன.

கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக பிர திக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ் சீவன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவண முத்து, கல்முனை ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளர் வி.நிர்மலன் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இதன்போது மாணவர் தலைவர்க ளுக்கு சின்னங்கள் சூட்டப்பட்டன.

# யாழ். சித்த மருத்துவ விரிவுரையாளர் இந்தியாவில் தங்கம் வென்று சாதனை !

(அ.அஸ்வர்)

இலங்கையைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ விரிவுரையாளர் இந்தியாவில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் விரிவுரையாளராக கடமையாற்றும் டாக்டர் நித்தியப்பிரியா சிவராம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட குழந்தை மருத்துவத் துறையில் மேற்படிப்பை முடித்து பரீட்சையில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இவர் தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 2020 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் நடைபெற்ற பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதி கூடிய புள்ளிகள் பெற்றுள்ளார்.

இதுவரை சித்தமருத்துவத்தின் குழந்தை மருத்துவத்துறையில் இலங்கையிலிருந்து சென்று பட்ட மேற்படிப்பை முடித்து வந்த இரண்டாவது மருத்துவர் என்பதும், வரலாற்றில் இலங்கையிலிருந்து சென்று தங்கப் பதக்கத்தைப் பெற்ற முதல் மருத்துவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



யாழ். பல்கலைக் கழகத்தின் இளநிலைப்பட்டப்படிப்பிலும் இறுதியாண்டில் முதல் தரத்தில் சித்தி பெற்று முதலிடம் பெற்று பல்கலைக்கழகத்தின் சிறப்பு விருதுகளை இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நூற்றாண்டு கால ஆசிரியதின விழாவும் நூற்றாண்டு இசைப்பேழை வெளியீடும்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆசிரியர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆசிரிய மாணவர் மன்றத் தலைவர் சுப்பிரமணியம் தனசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் இசையமைப்பாளருமாகிய ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோவின் 'கலாசாலைத்தாயே...' என்ற இசைப்பேழை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

# இடியன் துப்பாக்கிகளுடன் முல்லையில் ஒருவர் கைது!

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில்நேற்று இடியன்துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (04) இரவு 8.30 மணியளவில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் சட்ட விரோதமாக பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேப்பாபிலவு பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற பொலிஸார் வீட்டைச் சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்ட விரோதமாக வைத்திருந்த துப்பாக்கி இரண்டை மீட்டுள்ளனர்.



இவற்றை வைத்திருந்த 34 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(சப்னா றிபாஸ்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அக்கறைப்பற்று கல்வி வலயத் தக்கு உட்பட்ட ஒலுவில் அல்மினாறா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

"எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப் பொருளில் பாடசாலை அதிபர் எம். வை.அப்துல் மஜீத் தலைமையில் செவ்வாய்க்கிழமை(03) சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பிரதேசத்தில் இயங்கிவரும் ஸ்டென்போர்ட் உயர் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தவிசாளர் எம்.எல்.நஜாத் மற்றும் ஐ.எம்.இஹ்ஸாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பெறுமதிமிக்க கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

# சூட்டு காயத்துடன் இராணுவ சிப்பாய்

இராணுவ சிப்பாய் ஒருவர் துப்பாக்கி சூட்டில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (03) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு நாயாறு பகுதியிலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் ஒருவர் தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை வைத்திய சாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பயன்படுத்த முடியாத நிலையில் சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள சாய்ந்தமருது பிரதேச மக்களின் ஓரேயொரு பொழுதுபோக்கு தளமான கடற்கரை பூங்கா பொது மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் உடைந்தும், துருப்பிடித்தும் காணப்படுகிறது.

பிரதேச மக்களதும் , சிறுவர்களதும் பொழுது போக்குக்காக 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி இந்த கடற்கரை பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை மாகநகரசபை முகாமைத்துவம் செய்து வருகின்ற இந்த கடற்கரை பூங்கா சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் அடங்கியுள்ளது.

இங்குள்ள விளையாட்டு உபகரணங்கள் உடைந்தும், துருப்பிடித்தும் சிதைவடைந்தும் உள்ளன.

இதனை இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நீதிவானுக்கு அச்சுறுத்தல்: வன்மையாகக் கண்டிக்கிறோம்!

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(பொகவந்தலாவ நிருபர்)

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவானின் பதவிவிலகல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இடம்பெற்றிருந்தால் அதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன் கிழமை பத்தரமுள்ள இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிக்கையில்–



முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் டீ. சரவணராஜாவின் பதவி விலகல் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இடம்பெற்றிருந்தாலோ அல்லது நிர்பந்தத்தின் அடிப்படையில் பதவி விலகியிருந்தால் இந்த சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது நான் இலங்கை நாட்டில் இருக்க வில்லை. நான் வெளிநாடு சென்றிருந்த போது நீதிவானின் பதவி விலகல் கனடா நாட்டிலும் பரவலாக பேசப்பட்டது. நீதிவான் எதற்காக பதவி விலகினார் என்ற காரணத்தை இதுவரை அவர் அறிவிக்கவில்லை.

இருந்தாலும் கூட இந்த பதவி விலக லின் பின்னணியில் சூழ்ச்சி காணப் படுகின்றது.

அதிபர்களுக்கான நியமனங்களை வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கில் கல்வி அமைச்சு தொடர்ந்தும் செயட்பட்டு கொண்டிருக்கின்றது. அந்த நியமனம் முடங்கி கிடந்தாலும் அதிபர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

கல்வி அமைச்சராக நான் பொறுப் பேற்ற பிறகு எனது காலப் பகுதியில் கல்வி துறைக்கு முன்னெடுக்க கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.-என்றார்.




# தெரிவான பயனாளிகளுக்கு நிலக்கடலை வழங்கிவைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு நேற்று (04) கொக்குதொடுவாய் கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து நிலக்கடலை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கு தொடுவாய் கமநல சேவைகள் நிலை யத்திற்குட்பட்ட கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி ஆகிய கிராம அலு வலர் பிரிவுகளை சேர்ந்த தெரிவு செய் யப்பட்ட 50 பயனாளிகளுக்கு ஒரு ஏக்கர் பயிர்செய்கைக்கான தலா 50 கிலோ விதை நிலக்கடலை உள் ளீடுகளும் அத்துடன் ஆரம்ப கட்ட நில பண்படுத்தலுக்காக சிறு தொகை கொடுப்பனவும் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் நிதிப் பங்களிப்பில் கொக்குதொடுவாய் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் ஜீவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கொக்குத் தொடுவாய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அந்தோனிப்பிள்ளை ஜோன்ஸ்சிற்றா, விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி உத்தியோகத்தர் பத்திமனோ கரன் விமல்ராஜ், அபிவிருத்தி உத்தி யோகத்தர் பாஸ்கரன் தனுசன், கொக்குதொடுவாய் விவசாய போத னாசிரியர் இராசேந்திரன் நிதுஷன், கொக்குளாய் விவசாய போதனாசிரியர் தனபாலசிங்கம் துளசிராம் மற்றும் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# முல்லைத்தீவு ஆஸ்பத்திரி இயந்திரம் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட மாட்டாது!

## அதற்கு இடமளியோம் என்கிறார் செல்வம் எம்.பி.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் உள்ள மருத்துவ இயந்திரம் ஒன்றை முல்லைத்தீவில் இருந்து அநுராதபுரம் மாற்றுவதாக வெளியாகும் செய்தியில் உண்மையில்லை. அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் என்று என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் இருக்கும் 'எண்டஸ்கோப்' இயந்திரத்தை அநுராதபுர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அநுராதபுர வைத்திய சாலையிலுள்ள வைத்தியர்களால் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவில் பரவலாக பேசப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவ்விடயம் சம்பந்தமாக தெளிவினை பெற்று கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வீ.சண்முகராஜாவை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் ஆகியோர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சந்திப்பின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் இருக்கும் இயந்திரம் ஒன்றினை அநுராதபுரம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அதன் உண்மை தன்மையை அறியும் விதமாக நானும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் விஜிந்தனும் நேரடியாக வைத்திய சாலைக்கு சென்று அதற்கு பொறுப்பான வைத்திய அதிகாரியை சந்தித்து கலந்துரையாடியிருந்தோம்.

அவ்வாறான கோரிக்கை கடிதங்களோ அல்லது தொலைபேசி மூலம் அழைப்போ கிடைக்கவில்லை. அவ்வாறு வருகின்றபோது அதனை நாங்கள் மீள வழங்க முடியாது எனவும் அவர்கள் கூறினார்கள்.

அநுராதபுர வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாக கூறப்படுவது வதந்தியே. முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அவ்வாறான விடயம் இடம்பெறவில்லை என்பதனை உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே யாரும் கவலைப்பட வேண்டிய தேவை இல்லை. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்டத்தில் இருக்கின்ற வைத்திய சாலையில் வசதிகள் குறைவாக இருந்தாலும் அனைவரும் சிறப்பாக வேலை செய்கின்ற நிலை காணப்படுகின்றது.

தென்னிலங்கைக்கு உபகரணங்கள் கொண்டு போகும் சந்தர்ப்பங்கள் வருமாக இருந்தால் நிச்சயம் அதனைத் தடுத்து நிறுத்துவோம்.

தற்போது வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு சென்று கொண்டிருக்கின்ற நிலையில் குறைந்தளவு வைத்தியர்களுடன் வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றது. மக்களும் சென்று பயன் பெற்று வருகின்ற சூழ்நிலையிலே இவ்வாறான இயந்திரங்களை கொண்டு செல்வதாக இருந்தால் அனுமதிக்க முடியாது. குறிப்பாக முல்லைத்தீவில் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற வகையில் முக்கிய கவனம் செலுத்துவோம்.– என்றார்.

# காலாவதியான பொருள்கள் விற்றவர்கள் மீது நடவடிக்கை

திருகோணமலையில் காலாவதியான அழகு சாதனைப் பொருள்கள் விற்பனை செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவலைப்பின் போது சந்தைப்படுத்த முடியாத அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்ததால் நான்கு கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (03)இடம் பெற்றது இந்த நடவடிக்கையின் போது மூதூரில் 3 அழகு சாதனப் பொருள் கடையும் கிண்ணியாவில் ஒரு கடையுமாக நான்கு கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர் பகுதியில் அரிசி விற்பனை விலை காட்சிப்படுத்தாத கடை உரிமையாளர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





# இரத்ததானம் செய்தனர் மன்னார் விவசாயிகள்!

(மன்னார் நிருபர்)

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான முகாம் செவ்வாய்க்கிழமை (03) காலை முதல் மன்னார் உயிலங்குளம் பகுதியில் அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.



மன்னார் மாவட்ட கமநல உதவி ஆணையாளர் அன்ரனி மெரின் குமார் தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாண வைத்தியசாலைகளில் உள்ள இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், யாழ். போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது மன்னார் மாவட்ட விவசாயிகள் மற்றும் கமநல கேந்திர நிலைய பணியாளர்களும் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

இரத்த தானம் செய்பவர்களுக்கு மன்னார் மாவட்ட கமநல உதவி ஆணையாளரால் மரக்கன்று வழங்கப்பட்டன.



## புதிதாக அமைக்கப்பட்டுள்ள

# சிப்பியாறு அந்தோனியார் ஆலயம் மன்னார் ஆயரால் திறந்து வைப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் யாழ் பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சிப்பியாறு புனித அந்தோனியார் ஆலயம் செவ்வாய்க்கிழமை (03) அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை ஆலயத்தை அபிஷேகம் செய்து திறந்து வைத்தார்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர்.



மன்னார் மறை மாவட்ட ஆயர் ஆலயத்தை அபிஷேகம் செய்து திறந்து வைத்த பின் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியை தொடர்ந்து புனித அந்தோனியாரின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

# பொறியில் சிக்கிய நீர்மூழ்கிக் கப்பல்: இராணுவ வீரர்கள் 55 பேர் உயிரிழப்பு



சீனாவுக்குச் சொந்தமான அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இதில் பயணித்த 55 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் லண்டனில் இருந்து வெளியாகும் தி டைம்ஸ் இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சீனாவுக்கும், கொரிய தீபகற்பத்துக்கும் இடையே உள்ள மஞ்சள் கடல் பகுதியில் சீன கடற்படைக்கு சொந்தமான அணு சக்தி நீர்மூழ்கி கப்பல் வந்தபோது கடலடியில் வைக்கப்பட்டிருந்த பொறியில் சிக்கியுள்ளது.

இதில், அந்த கப்பலின் கப்டன் மற்றும் 21 அதிகாரிகள் உள்ளிட்ட 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இந்த கப்பல் ஷாங்டாங் மாகாணம் அருகே சென்றபோது, கடல் அடியில் எதிரி நாட்டுக் கப்பல்களைத் தடுக்க சீன இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்த இரும்புச் சங்கிலியிலும், நங்கூரத்திலும் சிக்கியுள்ளது. அந்த சங்கிலிப் பிணைப்பிலிருந்து கப்பலால் வெளியே வரமுடியவில்லை.

எதிரிநாட்டுக் கப்பல்கள் சீன கடல் பகுதிக்குள் நுழைவதைத் தடுக்கவே இந்த பொறிகளை சீன கடற்படை வைத்திருந்தது. சங்கிலியில் சிக்கிக் கொண்டு தண்ணீரின் மேல்பகுதிக்கு வருவதற்கு அந்த அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலுக்கு 6 மணி நேரத்துக்கு மேலாகிவிட்டது. அதற்குள் கப்பலில் இருந்த ஒக்ஸிஜன் முழுமையாக நிறைவடைந்ததில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்தத் தகவலை அந்த கடல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த உளவுக் கருவிகள் கண்டுபிடித்து தெரிவித்துள் என என பிரிட்டன் இதழில் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

இந்த அணுசக்தி நீர்மூழ்கி சீனாவின் பி.எல்.ஏ.இராணுவப் பிரிவுக்குச் சொந்தமானது என்றும், அதன் எண் 093 – 417 எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# ஆப்கான் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறவேண்டும்!

## பாகிஸ்தான் உத்தரவு!

அங்கீகரிக்கப்படாத அனைத்து ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கை யாளர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் சுமார் 1.7 மில்லி யன் ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக் கையாளர்கள் உள்ளனர் என மதிப் பிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ் தானில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பத்திலிருந்து புகலிடம் கோரி பாகிஸ்தானுக்குள் நுழையும் ஆப்கானிஸ்தான் நாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் அண்மையில் இரு நாடுகளினதும் எல்லை பகுதி களில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்



களால் பதற்றம் அதிகரித் துள்ளது.

ஜனவரி மாதம் முதல் பாகிஸ்தானின் எல்லை பகுதியில் 24 தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டன என பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் சர்ஃப்ராஸ் புக்டி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு காரணமான ஆப்கானிஸ்தானியர்கள் பலர் பாகிஸ் தானில் இருந்து செயற்பட்டனர் என கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் பாகிஸ்தானிலுள்ள அனைத்து ஆப்கானியர்களும் வெளி யேற வேண்டுமென பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் சர்ஃப்ராஸ் புக்டி உத்தரவிட்டுள்ளார்.

அவர்கள் நாடு திரும்பவில்லையா யின் மாகாணங்களில் உள்ள அனைத்து சட்ட அமுலாக்க அமைப்புகளால் அவர் கள் நாடு கடத்தப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் விசா மற்றும் கடவுச் சீட்டு உள்ள ஆப்கானிஸ்தான் பிரஜைகள் மட்டுமே நாட்டுக்குள் அனும திக்கப் படுவார்கள் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

# வெள்ளப் பெருக்கில் சிக்கி 23 இராணுவ வீரர்கள் மாயம்!



இந்தியா – சிக்கிம் மாநிலத்தில் ஏறபட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 23 இந்திய இராணுவ வீரர்கள் காணாமல் போயுள்ளனர் என இந்திய இராணுவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிக்கிம் மாநிலத்தின் வடக்குப் பகுதியில் உள்ள லோனக் ஏரி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் ஏற்பட்ட கடும் மழையால் டீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இந்த திடீர் வெள்ளத்தில் இராணுவ வீரர்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பல இந்திய இராணுவ தளங்கள் மற்றும் பல இராணுவ வாகனங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக படையினர் காணாமல் போயுள்ளனர் என கூறப்படுகிறது.

இது குறித்து குவாஹாட்டி இராணுவ மையத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், தீஸ்டா ஆற்றில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இராணுவ வீரர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெள்ளப்பெருக்கில் சிக்கி ஐந்து பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# சோனியாவுக்கு நாய்க்குட்டியை பரிசளித்தார் ராகுல் காந்தி!


காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி உலக விலங்குகள் தினத்தையொட்டி நேற்று சமூக ஊடகங்களில் தனது புதிய குடும்ப உறுப்பினரை அறிமுகப்படுத்தியுள்ளார்.

நூரி என்று பெயரிடப்பட்ட பெண் நாய்க்குட்டியை கோவாவிலிருந்து வாங்கி தனது தாய் சோனியாவுக்கு அவர் பரிசளித்துள்ளார்.

சமீபத்தில் கோவாவுக்கு பயணம் மேற்கொண்ட ராகுல் அங்குள்ள ஒரு குடும்பத்தை சந்தித்தார். அந்த குடும்பத்திடம் இருந்த ஆண், பெண் நாய் குட்டிகளை கண்டு ரசித்த ராகுல் பின்னர் பெண் நாய் குட்டி நூரியை மட்டும் தனது தாய்க்கு பரிசளிக்க தேர்வு செய்தார். இதுதொடர்பான காணொளியை ராகுல் காந்தி சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.



# சூதாட்ட செயலி மோசடி: நடிகர் ரன்பீர் கபூருக்கு அழைப்பாணை



சூதாட்ட செயலி விவகாரத்தில் நடிகர் ரன்பீர் கபூருக்கு அமலாக்கத் துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது. அதன்படி, நாளை ஆஜராக வேண்டும் என ரன்பீர் கபூருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் டுபாயை தலைமையிடமாக கொண்டு இந்தியாவில் செயல்படும் ஓர் இணையத்தள சூதாட்ட செயலியில் கோடிக்கணக்கில் பண மோசடி நடந்திருப்பதை அமலாக்கத் துறை கண்டறிந்தது. இந்த செயலியை விளம்பரம் செய்ய நடிகர் ரன்பீர் கபூர் பணம் வாங்கியிருந்தார்.